2015 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இந்தக் கருத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 329, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

329—

மின் வாரிய அலுவலகக் கட்டடம்

***28639 திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்திலுள்ள மழையூர், புதுப்பட்டி மற்றும் வெட்டன்விடுதி மின் வாரிய பிரிவு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மின் பகிர்மானத்திற்குட்பட்ட மழையூர், புதுப்பட்டி மற்றும் வெட்டன்விடுதி மின் வாரிய பிரிவு

அலுவலகங்கள் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இங்குள்ள மின் வாரிய பிரிவு அலுவலகம் போக்குவரத்து வசதி நிறைந்த பகுதியில் உள்ளதாலும், அவ்வலுவலகங்களில் போதிய இடவசதி உள்ளதாலும், நுகர்வோருக்கு எந்தவித சிரமமும் இல்லை. எனவே, புதுக்கோட்டை மின் பகிர்மானத்திற்குட்பட்ட மழையூர், புதுப்பட்டி மற்றும் வெட்டன்விடுதி மின் வாரிய பிரிவு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான அவசியம் தற்போது எழவில்லை. தேவை ஏற்படின், வாரியத்தின் நிதிநிலைமைக்கேற்ப, மேற்கண்ட மின் வாரிய பிரிவு அலுவலகங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்ட பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல கட்சிக் கூடாரங்கள் காலியாக இருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. காரணம் அனைவரும் மாண்புமிகு அம்மாவின் இருப்பிடம் நோக்கி வருவது மரபுதானே! (மேசையைத் தட்டும் ஒலி) இனி தமிழகத்தில் ஒரே கட்சி, ஒரே கொடி, ஒரே முதலமைச்சர், அது எங்கள் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மை, உழைப்பு, உயர்வு, முயற்சி இதுவே வாழ்வின் வெற்றி என்று எங்களுக்கு நாளும், நாளும் வேத வாசகம் சொல்லும் தாயே, தங்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட மழையூர், புதுப்பட்டி மற்றும் வெட்டன்விடுதி ஆகிய பகுதிகளில் மின் வாரிய பிரிவு அலுவலகங்களுக்கு எதிர்காலத்தில் சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) உறுப்பினர் நன்றி சொல்லிவிட்டார்.*

2015 செப்டம்பர் 23]

முற்பகல் 10—20

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட, வாலாந்தூர், இடையப்பட்டி, பாப்பாபட்டி, வண்டாரி ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என் வணக்கத்தை அந்தப் பகுதி மக்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே விக்கிரமங்கலத்தில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் இருந்து வருகிறது. அந்தப் பகுதிகளெல்லாம் விவசாயத்தை நம்பியிருக்கின்ற பகுதி. அந்தப் பகுதியில் உள்ள இத்துணை மின் நிலையத்தை 110/11 கே.வி. துணை மின் நிலையமாக தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு ஏற்கெனவே நான் விரிவாகப் பதிலளித்திருக்கிறேன். முதலில் அங்கே 110/11 கே.வி. துணை மின் நிலையம் இருக்கிறதா அல்லது 110/33 கே.வி. துணை மின் நிலையம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். 110/11 கே.வி. துணை மின் நிலையத்தை அமைத்து அதிலிருந்து என்ன மின் வசதி கொடுக்க முடியுமோ அதே அளவிற்கு 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலும் கொடுக்கலாம். ஏற்கெனவே 33/11 கே.வி. திறன்கொண்ட அந்தத் துணை மின் நிலையம் உச்ச மின் பளுவை அடைந்திருந்தால், 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலேயே இன்னும் தரம் உயர்த்துவதற்கு வாய்ப்பிருந்தால், அதிலே 10 எம்.வி.ஏ. திறன்கொண்ட பவர் டிரான்ஸ்பார்மரோ அல்லது 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட பவர் டிரான்ஸ்பார்மரோ கூடுதலாகப் போட்டுவிட்டாலே தாழ்வழுத்த மின் பிரச்சினை தீர்ந்துவிடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை தரம் உயர்த்த முடியுமா, திறனை மேம்படுத்த முடியுமா என்று ஆய்வு செய்து, திறனை மேம்படுத்த வாய்ப்பு இருந்தால், அந்த 33/11 கே.வி. துணை மின் நிலையத்தினை தரம் உயர்த்துவதற்கும், அப்படி வாய்ப்பு இல்லையென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

சொன்னதுபோல 110/11 கே.வி. துணை மின் நிலையமாகத் திறனை உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து, உரிய முடிவுகளை எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் இருக்கக்கூடிய அதிராம்பட்டினம் பேரூராட்சி வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய நகரம். அங்கு பல்வேறு இடங்களில், உயர் மின்னழுத்தக் கம்பிகள் மிகத் தாழ்வாகச் செல்வதாகவும், பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையில் இருக்கிறதென்றும், குறிப்பாக அதிராம்பட்டினம், பிலால் நகர் போன்ற பகுதிகளிலே மிக ஆபத்தான நிலை இருப்பதாகவும் அந்தப் பகுதி மக்கள் கூறுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, அதை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ஆய்வு செய்து, தாழ்வாகச் செல்கின்ற மின் கம்பிகளை முறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

திரு. ஆ. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் சரித்திரத் தாய், தமிழகத்தின் விடிவெள்ளி அம்மா அவர்களை வணங்குகிறேன். நிலக்கோட்டை தொகுதி, நூத்தலாபுரம் ஊராட்சியில் மின் பகிர்மானக் கட்டடம் கட்டப்பட்டு, துணை மின் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால்

2015 செப்டம்பர் 23]

அது திறக்கப்படும் என்று தெரிவித்தீர்கள். அது இந்த ஆண்டே திறக்கப்படுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியிலே, துணை மின் நிலையம் கட்டி முடிக்கப்படும் தருவாயில் இருக்கிறது. இன்னும் ஒரு சில பகுதிகளில் மட்டும் வேலைகள் இருக்கின்றன. அந்தப் பணிகள் முடிந்தவுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால், காணொளிக்காட்சி மூலமாக அந்தத் துணை மின் நிலையம் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 330, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

330—

புறவழிச் சாலை

***53908 திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, மதுரை–சென்னை நான்கு வழிச்சாலையிலுள்ள ராஜகெம்பீரத்தில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை கிழக்கு தொகுதி, ஒத்தக்கடையில், மதுரை–சென்னை நான்கு வழிச்சாலையில், ராஜகெம்பீரத்தில் தற்சமயம் புறவழிச் சாலை அமைக்க அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.